# பூநகரி பாதையை திறக்கஜனாதிபதி அனுமதி?

(கொழும்பு)

பூநகரிப் பாதையை பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அனுமதி அளித்துள்ளதாக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பாதையினூடாக பொதுமக்கள் பாதுகாப்பாக சென்றுவருவதற்கான அனைத்துப் பொறுப்புகளும்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE·EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 10 இதழ் 347
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23 — 01 — 1993

## சமரசதீர்வு ஏற்பட டென்மார்க் முயற்சி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு சமாதான சமரச தீர்வு ஒன்று ஏற்படுவதற்காக மேற்குநாடுகளின் உதவியுடன் டென்மார்க் மனித உரிமைகள் குழு பாடுபட்டுவருவதாக இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பிற்கு டென்மார்க் மனித உரிமைகள் குழுவைச்சேர்ந்த மூன்று பிரதிநிதிகள் விஜயம் செய்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

# கிட்டு சமாதான தீர்வுடனேயே யாழ். நோக்கி பயணமானர்!

## லண்டன் குவேக்கர்ஸ் அமைப்பு அறிக்கை

(லண்டன்)

"இலங்கையின் இனப்பிரச்னைக்கு சமாதானத்தீர்வு காண்பதற்கான சர்வதேச நாடுகளின் சமாதானத்திட்டத்துடனேயே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய தளபதியான கிட்டு யாழ்ப்பாணத்துக்குச் சென்றார்" இவ்வாறு லண்டனில் இயங்கிவரும் மனித உரிமை அமைப்பான 'குவேக்கர் சீசன் சேவை' நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு சமாதான தீர்வு காண்பதற்காக, தீவிரமாக பாடுபட்டுவரும் குவேக்கர்அமைப்பு அதன் அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது;

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதியான திரு. கிட்டு ஒரு தீவிரப்போராளியாக இருந்த போதிலும், இலங்கையின இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் இருந்தது. இதற்காக அவர் மிகக்கடுமை

(4-ம் பக்கம் பார்க்க)

## நெடுமாறன் 15 நாள் நீதிமன்ற காவலில்

(சென்னை)

கிட்டு விவகாரம் தொடர்பாக தமிழக பொலிசாரால் சில தினங்களுக்குமுன் சென்னையில் வைத்து கைதுசெய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன், தமிழக சட்டசபை முன்னாள் சபாநாயகர் புலமைப்பித்தன், தமிழ்நாடு விடுதலைக்குயில்கள் அமைப்பைச் சேர்ந்த சுப.

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழ் அகதிகள் குறித்து கொழும்பில் நேற்று பேச்சு

(திருநெல்வேலி)

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்னை தொடர்பாக ஜெனீவாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உயரதிகாரிகள் இலங்கை அரசதரப்பினருடன் கொழும்பில் நேற்று பேச்சுவார்த்தை நடாத்தினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான எதிர்ப்பு ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை

கப்டன் ஜெயசந்திரன்

(புதுடில்லி)

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தமதுகப்பலில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை என்று கேணல் கிட்டுவை ஏற்றிவந்த கப்பலின் கப்டன் ஜெசச்சந்திரன் கூறியுள்ளார்.

சமாதானத் திட்டத்துடன் வந்த கேணல் கிட்டுவின் கப்பல் தீப்பிடித்து எரியும் போது கடலில் குதித்து உயிர்தப்பிய கப்டன் ஜெயச்சந்திரன் நேற்று இந்திய பாதுகாப்பு அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படும்போது மேற்படி தகவலை தெரிவித்துள்ளதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது. (வி)

## பலாலி கைதிகளை விடுவிக்க ராணுவ அதிகாரி விருப்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் உள்ள கைதிகளை விடுதலை செய்வதற்கு பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான பிரிகேடியர் குலதுங்கா விருப்பம் கொண்டுள்ளதாக யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்

எதுவித குற்றமும் செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவை கண்டித்து ஆஸியில் கண்டன ஊர்வலம்

(கன்பரா)

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கிட்டு உட்பட 10 போராளிகள் வங்கக்கடலில் பலியானதற்கு இந்தியாவை கண்டிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் இலங்கைத் தமிழர் நேற்று பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.

அவுஸ்திரேலியாவிலுள்ள இந்திய தூதரகம் முன்னால் நடைபெற்ற இவ்ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் வயது வேறுபாடின்றி கலந்துகொண்டனர்.

இந்தியாவின் செயலைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளை தாங்கியவாறும் ஆக்ரோஷமாக கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் மக்கள் கலந்து கொண்டனர். (இ-க)

## மன்னாரில் புலிகள் தாக்கு இரு பொலிஸார் பலி

(மன்னார்)

மன்னாரில் ரோந்துசென்ற சிறிலங்கா பொலிஸ் அணிமீது நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு பொலிசார் கொல்லப்பட்டனர். ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை 7.05 மணியள

[4-ம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9-30 மணி தொடக்கம் 10-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறை அறிவித்துள்ளது.

## அப்பியாச கொப்பிகள் குமணவில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகள் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வரும் குமணக் கப்பலில் வருவதாக, இணைய நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் சகல ரகத்திலான பாடசாலை அப்பியா

(-4ம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகள் மூலம் நீதி கிடைக்க வேண்டும்

— அங்கிலிக்கன் ஆயர்

(கொழும்பு)

பேச்சு வார்த்தைகள் மூலம் நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கொழும்பு ஆயர் கென்னத் பெர்ணாண்டோ தமிழ் தலைவர்களிடமும் அரசிடமும் வலியுறுத்தியுள்ளார்.

கொடூரமான இரத்தக்களரியை நிறுத்தவும் பேச்சுக்கள் மூலம் நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட வழிவகைகளைக் காணுமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-ரி)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண பொது நூலகம்

## வரிவிளம்பரம்

### வாடகைக்கு

படிக்கும் அல்லது வேலை செய்யும் பெண்பிள்ளைகள் மட்டும் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு உண்டு நேரில் வரவும் 20/1, 2ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (எ- 7163)

### வீடு தேவை

வங்கி ஊழியர் ஒருவர் தனது குடும்பத்துடன் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை. ஆனைப்பந்தி, கந்தர் மடம் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. C-7151, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ-7151)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு. வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து. இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)


## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்புரம் மத்திய சன சமூக நிலையத்தின் 43-வது ஆண்டு நிறைவு விழா இன்று 23-ம் திகதி நிலையத் தலைவர் திரு. அ. சுகதேவன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இராசி பலன்

**23-01-1993**
**சனிக்கிழமை**
**(தமிழுக்கு தை 10)**

பிரதமை பி. இ. 1-38 வரை. திருவோணம் பி. இ. 4-08 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 9-35 முதல் 11-06 வரை. சுப நேரம் மாலை 3-36 முதல் 5-06 வரை.

மேடம்: பெண்களை வெல்லுதல், சமயோசித புத்தி, மன மகிழ்ச்சி.

இடபம்: ஆரோக்கியக் குறைவு, உறவினர் பகை, அலைச்சல்.

மிதுனம்: திடுக்கிடும் தகவல், தொழில் மாற்றம், கடும் சினம்.

கடகம்: தெய்வபக்தி, தொழில் யோகம், இனசன வருகை.

சிங்கம்: வாழ்க்கை வெற்றி, அறிவுக் கூர்மை, கல்வி மேன்மை.

கன்னி: காரிய தாமதம், குடும்ப விருத்தி, வெறுப்பு.

துலாம்: முரட்டுத்தனம், உயர்ந்தவர் நட்பு, பண வரவு.

விருச்சிகம்: வீண் வம்பு, உறவினர் மதிப்பு, இனிய வார்த்தை.

தனுசு: பலவித துன்பம், தொழில் முரண்பாடு, தியாகம்.

மகரம்: கடன் வசூலித்தல், பிறர் யோசனை, பயணம்.

கும்பம்: கருத்து மோதல், கடமை தவறுதல், மனச் சுமை.

மீனம்: அறிவுக் கூர்மை, இசைத்துறை ஈடுபாடு, பெருமை.

- ஜோஸ்யர்

# க. பொ. த. உயர்தர பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 1992 சில பாடசாலைகளின் பெறுபேறுகள் நேற்றைய ஈழநாட்டில் வெளிவந்தன. ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

**சென், பற்றிக்ஸ் யாழ்ப்பாணம்**

பொறியியல்: 2ஏ 2பி, 2ஏ 2சி, ஏ 2பிசி, ஒருவர் ஏ பி சி எஸ் இருவர்.

மருத்துவம்: ஏ 2பி சி இருவர்.

வர்த்தகம்: 2 ஏ பிசி ஒருவர் ஏ 3பி மூவர் ஏ 2பிசி ஒருவர் ஏபி 2சி நால்வர்.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்**

கலை: ஏ பி 2சி ஒருவர்.

பொறியியல்: பி 2சி எஸ், ஒருவர், பி சி 2 எஸ். ஒருவர் ஏ 3 சி இருவர்.

வர்த்தகம்: 2ஏ 2பி, ஒருவர் ஏ 3 ஒருவர்.

**உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி**

மருத்துவம்: ஏ 2பிசி ஒருவர்.

பொறியியல்: ஏ 3பி ஒருவர்

வர்த்தகம்: 3 பிசி, ஒருவர் 2 பி 2 சி ஒருவர், 2 பி 2சி ஒருவர், பி 3சி ஒருவர்.

கலை: பி 3சி ஒருவர்.

**வட இந்து மகளிர்**

மருத்துவம்: 2பி 2சி மூவர்.

பொறியியல்: ஏ 3பி, ஒருவர் ஏ 2 பி சி ஒருவர்

வர்த்தகம்: 2ஏ 2பி ஒருவர், ஏ 2 பிசி ஒருவர் ஏபி 2 சி, ஒருவர் ஏ பி சி எஸ், ஒருவர் 4 பி, 3 பிசி. ஒருவர் 2பி 2சி மூவர்.

**பருத்தித்துறை மெதடிஸ்ட்**

மருத்துவம்: 2ஏபிசி, ஒருவர் ஏ2பிசி ஒருவர் பி3சி, ஒருவர் 2பி2சி இருவர், பி2 சி எஸ் இருவர்.

பொறியியல்: 3ஏபி, இருவர், 2ஏ2பி இருவர், 2ஏபிசி ஒருவர்.

வர்த்தகம்: 2ஏபிசி ஒருவர், ஏ3பி ஒருவர், ஏ2பிசி ஒருவர், பி2சி எஸ் ஒருவர். பி3சி ஐவர், 2பி2 சி அறுவர். பி2 சிஎஸ் இருவர்.

கலை:- 2பிசி எஸ் மூவர்.

**யாழ். வைத்தீஸ்வரா**

1ஏ, 1பி, 2 சி வர்த்தகம் (க. செல்வரூபன்) 1பி, 3சி கலை (நா. குமுதினி) 1பி, 2சி, 1எஸ் வர்த்தகம் (1) 1பி, 1சி, 2எஸ் கலை (1)

**செங்குந்தா இந்துக்கல்லூரி**

கலைப்பிரிவு: 2பி 2சி - ஆ. ஷகிலதா,

**மல்லாகம் ம. வி.**

வர்த்தகம்: 1பி 3சி (1) 1ஏ 2சி 1எஸ்

**காரைநகர் யாழ்ற்ரன்**

வர்த்தகம்: 1ஏ 2பி 1சி (1) 2பி 2சி (1), 2பி 2சி (1), 1பி 3சி (1), 1பி 2சி 1எஸ் (1)

**இளவாலை சென். ஹென்றீஸ்**

வர்த்தகம் - 2ஏ 2பி (1)

**வீமன்காமம் ம. வி.**

கலைப்பிரிவு 1பி 2சி 1எஸ்

**தெல்லிப்பழை மகாஜனா**

கணிதப்பிரிவு: 4ஏ வாமதேவன் தமிழினி, 3ஏ 1பி வை. மஞ்சுளா, மேலும் ஒருவருக்கு 2ஏ 2பி 2ஏ 1பி 1சி (1)

வர்த்தகம்: 2ஏ 1பி 1சி (1), 4பி (1), 1ஏ 3பி (1), 1ஏ 3சி (1), 3பி 1சி (1). 2ஏ 1பி 1சி (1). 1ஏ 2பி 1சி

கலைப்பிரிவு: 2ஏ 1சி 1எஸ் (1)

விஞ்ஞானபிரிவு: 2பி 2சி இருவர்

**இளவாலை கொன்வென்ற்**

வர்த்தகப் பிரிவில் நான்கு மாணவிகளுக்கு ஏ, 3சி

**வட்டு. இந்து**

கணிதப் பிரிவில் சுந்தரமூர்த்தி ஸ்ரீராஜன் 3ஏ பி, ஒருவருக்கு ஏ, 2பி, சி

வர்த்தகம் - ஒருவருக்கு 2ஏ, 2சி, ஒருவருக்கு ஏ, 2பி, சி.

**யாழ்ப்பாணக் கல்லூரி**

கணிதம்-மூவருக்கு ஏ, 2பி, சி, ஒருவருக்கு ஏ, பி, 2சி, ஒருவருக்கு ஏ பி, சி, எஸ்

**காரைநகர் இந்து**

கணிதம் ஒருவருக்கு ஏ, 2பி, சி,

வர்த்தகம்- தி சிவகுமார் 4பி, ஒருவருக்கு 2ஏ பி, சி

**சுழிபுரம் விக்ரோறியா**

வர்த்தகம்-ஒருவருக்கு ஏ, பி, 2சி, ஒருவருக்கு ஏ, 2சி, எஸ்

விஞ்ஞானம்-ஒருவருக்கு 2ஏ, 2எஸ்,

**பண்டத்தரிப்பு மகளிர்**

வர்த்தகம்: ஒருவருக்கு ஏ, 2பி, சி ஒருவருக்கு ஏ, பி சி,

**இராமநாதன் கல்லூரி**

வர்த்தகம்: ஒருவருக்கு ஏ. பி. சி, எஸ் ஒருவருக்கு பி, சி, 2எஸ் ஒருவருக்கு 3சி எஸ்.

கலை: ஒருவருக்கு ஏ, 2சி, எஸ், ஒருவருக்கு 3பி, சி ஒருவருக்கு பி 2சி, எஸ். ஒருவருக்கு பி, 2சி. ஒருவருக்கு பி, சி. 2எஸ்,

**மானிப்பாய் இந்து**

பௌதிக விஞ்ஞானம்: ஒருவருக்கு பி, 2சி, எஸ். ஒருவருக்கு பி, 3சி ஒருவருக்கு 4சி.

உயிரியல்: ஒருவருக்கு பி, 2சி, எஸ்.

வர்த்தகம்; ஒருவருக்கு ஏ, 2பி, சி ஒருவருக்கு 3பி சி

கலை: ஒருவருக்கு ஏ. பி 2சி.

**மானிப்பாய் இந்துமகளிர்**

உயிரியல்: ஒருவருக்கு பி, 3சி, ஒருவருக்கு பி சி, 2எஸ்,

வர்த்தகம்: ஒருவருக்கு 2ஏ, 2பி. ஒருவருக்கு ஏ, 2பி, சி ஒருவருக்கு பி. 3சி

கலை: ஒருவருக்கு 2ஏ, 2பி. ஒருவருக்கு ஏ, 2பி சி. ஒருவருக்கு ஏ, பி, சி. ஒருவருக்கு பி 3சி. ஒருவருக்கு பி. 2சி, எஸ்,

**மானிப்பாய் மெமோறியல்**

வர்த்தகம்: ஒருவருக்கு 2ஏ, 2சி. ஒருவருக்கு 2சி, 2எஸ்.

கலை: ஒருவருக்கு பி. 2சி, எஸ் ஒருவருக்கு பி, 3 எஸ், ஒருவருக்கு 3சி, எஸ். ஒருவருக்கு 2சி 2எஸ்.

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயா**

பௌதிக விஞ்ஞானம்: ஒருவருக்கு ஏ, 2பி, சி.

உயிரியல் விஞ்ஞானம்: ஒருவருக்கு 4சி.

வர்த்தகம்: ஒருவருக்கு 3ஏ. பி, ஒருவருக்கு 2ஏ 2சி, மூவருக்கு 2பி, சி, எஸ். மூவருக்கு பி, 3சி.

கலை: ஒருவருக்கு ஏ, பி, 2சி ஒருவருக்கு 3பி, எஸ். மூவருக்கு பி, 3சி.

**கொக்குவில் இந்துக்கல்லூரி**

மூவருக்கு 3ஏ, பி.

**பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி**

இருவருக்கு 4ஏ,

**உடுவில் மகளிர் கல்லூரி**

வர்த்தகம்: ஒருவருக்கு 2ஏ, 2பி.

கலை: ஒருவருக்கு 2ஏ, 2பி.

உயிரியல்: ஒருவருக்கு ஏ, 3பி.

பௌதிகம்: ஒருவருக்கு ஏ, 3சி

**யாழ். வேம்படி கல்லூரி**

மருத்துவம்: 3 ஏ, 1 சி (ஒருவர்).

(109, சு-சி)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் சாவகச்சேரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வழமை போல் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. நிர்வாகசபை கலைக்கப்பட்டு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது என்று இம்மாதம் 20-ம் திகதி பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானதாகும்.

# இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஏற்படும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு விரைவில் ஏற்படுமென இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் ஜே. என். ஜா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)


## வெளிவந்துவிட்டது!

வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுதிய

**'பேராயர் சபாபதி குலேந்திரன்'**

(வரலாற்றுச் சுருக்கம்)

விலை: ரூபா 75/-

கிடைக்குமிடம்:

**வரணி மிஷன் விற்பனை நிலையம்**

பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(எ-2813)

## Jaffna College Institute of Technolegy Vaddukoddai

01-01 1993 10-01-1993 திகதிகளில் ஈழநாதத்திலும், 06-01-1993 ஈழநாடு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட எமது நிறுவன புதிய ஆண்டிற்கான விண்ணப்ப விளம்பரத்தின் முடிவு திகதி, விண்ணப்பதாரர்களின் நலன்கருதி 27-01-1993 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை 03-02-1993 அல்லது 05-02-1993 காலை 9-00 மணிக்கு JCIT அலுவலகம், வட்டுக்கோட்டையில் நடைபெறும். நேர்முகப்பரீட்சை கடிதங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகளும் தவறாது சமுகமளிக்கவும்.

பணிப்பாளர்.

(எ-2808)

## தமிழ் சாகித்திய விழா - 1993 சிறந்த நூல்களுக்குப் பரிசளித்தல்

1991 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1991 டிசம்பர் 31ஆம் திகதி வரை (இரு தினங்களும் உட்பட) வெளியிடப்பட்ட நூல்களின் ஆசிரியர்கள் வெளியீட்டாளர்களிடமிருந்து சாகித்திய நூற்பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நூலாசிரியர் இலங்கையராய் இருப்பதுடன், நூல் இலங்கையில் அல்லது இந்தியாவில் பிரசுரிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது நூல்களின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக 1992 நவம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் சேர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர். இத்திகதிக்குள் நூல்களை அனுப்ப முடியாதவர்கள் தமது நூல்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய கடிதத்தையாவது 1992 நவம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். பின்னர், 1992 டிசம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நூல்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
''றக்ஷ்ண மந்திரய'' 9 வது மாடி.
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02

மு கு: இவ் விளம்பரம் 22.01.1993 ம் திகதி எமது காரியாலயத்துக்கு கிடைக்கப் பெற்றது. (ஏ-2812)

# ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல்;

# அரபு, முஸ்லிம் நாடுகள் பெரும் சீற்றம்

ஈராக் மீது அமெரிக்கா 2-வது தடவையாக தாக்குதல் மேற்கொண்டது, அரபு லீக் நாடுகளுக்கும், முஸ்லிம் நாடுகளுக்கும் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கைப்பொம்மையாகவே, ஐ நா. சபை தற்போது செயல்பட்டு வருகின்றது என்றும் அடுத்தடுத்த யுத்தத்தினால் ஈராக் மக்கள் தமக்கு ஏற்படும் கஷ்டத்தினால் ஜனாதிபதி சதாம் ஹுசைனை வெறுக்க வேண்டும், என்ற அமெரிக்காவின் கபடநாடகம், இந்த தாக்குதலினால் படுதோல்வி அடைந்து விட்டது என்றும் மாறாக சதாம் ஹுசைனுக்கே மக்களின் செல்வாக்கு பெருகி உள்ளது என்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

1991-ம் ஆண்டு வளைகுடா போருக்குப்பின்பு, ஈராக், அமெரிக்காவினாலும் அதன் நேச நாட்டுப் படைகளினாலும் அடிக்கடி தாக்கப்படுவதும், இதனால் அப்பாவி ஈராக் மக்கள் கொலைப்படுவதும், ஆயிரக்கணக்கில் மக்கள் படுகாயமடைந்து தமது சொத்துக்களையும் இழந்து வருவது உலக முஸ்லிம் நாடுகளுக்கு தற்போது பெரும் கோபத்தையே ஏற்படுத்தியுள்ளது.

1991-ம் ஆண்டு வளைகுடாப் போரை ஆதரித்த அரபுநாடுகள் தற்போது ஈராக்மீது அமெரிக்காவும் அதன்நேச நாடுகளும் நடாத்திய தாக்குதலினால் பெரும் சீற்றம் அடைந்துள்ளன. இத்தாக்குதலுக்கு முன்னர் அமெரிக்கா முன்புபோல் அரபுநாடுகளை கலந்தாலோசிக்கவில்லை. இத்தாக்குதல் ஒரு தேவையற்ற தாக்குதல் என்றும் அரபுநாடுகள் கூறியுள்ளன.

அமெரிக்காவின் கைப்பொம்மையாக இருக்கும் சவூதிஅரேபியா கூட இத்தாக்குதலை கண்டித்துள்ளது. மற்றும் சூடான், பலஸ்தீனிய நாடுகள், ஜோர்டான், எகிப்து, லெபனன், ஈரான், லிபியா போன்ற நாடுகளும் இத்தாக்குதலை பலமாகக் கண்டித்துள்ளதுடன், அமெரிக்காவும் ஐ நா. சபையும் முஸ்லிம் நாடுகளுக்கு எதிராகவே தற்போது செயல்பட்டு வருகின்றன என்று பகிரங்கமாக குற்றமும் சாட்டியுள்ளார்கள்.

இஸ்ரேல் தன்நாட்டிலிருந்து வெளியேற்றிய பலதீனியர்களை உடனே இஸ்ரேலுக்குள் மீண்டும் குடியேற அனுமதிக்கவேண்டும் என ஐ. நா. சபை அவசர தீர்மானத்தை நிறைவேற்றியது, முன்னதாக இஸ்ரேல் தென்லெபனனைவிட்டு வெளியேறவேண்டும் என ஐ. நா. சபை தீர்மானம் நிறைவேற்றியது. இதுபோன்ற பல தீர்மானங்கள் இஸ்ரேலுக்கு எதிராக ஐ. நா.சபை நிறைவேற்றியும், இதுவரை ஒரு தீர்மானத்துக்காவது இஸ்ரேல் அடிபணிந்தது கிடையாது. அப்படிப்பட்ட இஸ்ரேலுக்கு எதிராக, அமெரிக்காவோ அல்லது ஐ. நா. சபையோ இதுவரை பொருளாதாரத் தடையையோ அல்லது இராணுவ நடவடிக்கையையோ ஏன் எடுக்கவில்லை. இதே போன்றுதான் யூகோஸ்லாவியாவில் முஸ்லிம்கள் தற்போது கடுமையான கொடுமைகளுக்குள்ளாகி வருவதை ஐ. நா. சபை ஏன் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்றெல்லாம் முஸ்லிம், அரபு நாடுகள் அனைத்தும் தற்போது கேள்விக்கணைகளைத் தொடுக்கத் தொடங்கிவிட்டன.

அமெரிக்காவின் திடீர் அதிரடித்தாக்குதல்களுக்கு இதுவரை அரபு நாடுகளே ஆளாகி வருகின்றன. குறிப்பாக, லிபியா மீது ஐ. நா. பொருளாதாரத்தடையை விதித்துள்ளது, ஈராக் மீது அமெரிக்கா அடிக்கடி தாக்குதல் நடாத்திவருகிறது. பி எல். ஓ. அமைப்பை அமெரிக்கா பயங்கரவாத அமைப்பு என்று கூறுகிறது, இவ்வாறான, அமெரிக்காவின் ஏதேச்சாதிகாரப் போக்குகளுக்கு ஐ நா. சபை தாளம் போடுகிறது என்று அரபு நாடுகள் கூறுகின்றன.

அமெரிக்கா, முஸ்லிம் நாடுகள் மீது அடிக்கடி மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்கும், ஐ நா. சபை, முஸ்லிம் நாடுகள் மீதும்-அரபு லீக் நாடுகள் மீதும் கடைப்பிடித்துவரும் ஒருதலைப் பட்சமான போக்குக்கும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான பில்கிளிங்டனினால் ஏதாவது விமோசனம் ஏற்படுமா? இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (வி)

## சிறுபான்மையினரை பாதிக்கக்கூடிய

# சட்டங்களை நாடாளுமன்றில் நிறைவேற்றக் கூடாது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சிறுபான்மை இன மக்களைப் பாதிக்கக்கூடிய எந்த ஒரு சட்டமோ அல்லது தீர்மானமோ நிறைவேற்றப்படக் கூடாது. நாடாளுமன்றத்தில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளில் கூடுதலானோரின் ஆதரவு இருந்தால் மட்டுமே அப்படியான சட்டத்தை அல்லது தீர்மானத்தைக் கொண்டுவரலாம்.

இவ்வாறு யாழ். மாவட்ட எம். பி திரு.கே.ஸ்ரீநிவாசன் வடக்கு-கிழக்கு இணைப்பில்லாத தமது சமஷ்டித் திட்டத்திற்கு ஆதரவாக, ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு.ஸ்ரீநிவாசன் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

மத்திய அரசு, இனம், சமயம், பால், பிறப்பிடம் ஆகியவற்றைக் கொண்டு, எந்த ஒரு பிரஜைக்கும் எதிராகப் பாகுபாடு காட்டக்கூடாது.

சகல பிரஜைகளுக்கும் அரசாங்கத் திணைக்களங்களில் எவ்வித பாகுபாடுமின்றி வேலை வழங்குவதற்குச் சட்ட மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேசியப் பொலிஸ் பிரிவும், மாநிலப் பொலிஸ் பிரிவும் தனித்தனியாக இருக்கவேண்டும். மாநிலப் பொலிஸ் பிரிவு ஐ. ஜி. பி தலைமையில் தனியாக இயங்கவேண்டும்.

சமஷ்டித் திட்டத்தில் கீழ்க்காணும அதிகாரங்களும் உள்ளடங்கியதாக இருக்கவேண்டும்

பொலிஸ், உள்ளகக்காரச் சட்டம், ஒழுங்கு, காணியும் அதன் பயன்களும், கல்வி (பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி உட்பட), கலாசாரம், மீன்பிடி, கைத்தொழில், உள்ளூராட்சி, கால்நடை பகுதி, விவசாயம், நீர்ப்பாசனம், சமூகநலச் சேவை, சுகாதாரம், போக்குவரத்து-வீதிகள், இறை சேர்ப்படுத்தல், கூட்டுறவு அபிவிருத்தி, மொழி, தொழில் என்பன. (வி)

## வடமராட்சி கடலில்

# பீரங்கிப் படகுகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதிக் கடற் பரப்பில் கடந்த மூன்று தினங்களாக சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகள் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படகுகளைக் கடந்த 19ம் திகதியிலிருந்து தாளையடிக் கடற் பரப்பில் படையினர் நிறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக தாளையடி மீனவர்கள் மீன் பிடித்தொழிலை மேற்கொள்ளமுடியாத நிலையில் பாதிப்புற்றிருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. (56)

## இ. காங்கிரஸ் கட்சியுடன்

# தி. மு. க. உறவு வைக்காது

## கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ்கட்சியுடன் தி மு க எதிர்காலத்தில் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளாதென்று தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமது கட்சி காங்கிரஸ்கட்சியுடன் கடந்த காலத்தில் வைத்திருந்த உறவு போதுமான படிப்பினையைத் தந்துள்ளது என்றும் அ தி மு, க. இந்திரா காங்கிரஸ் உறவு முறிந்தாலும் தமது நிலை மாறாதென்றும் அவர் கூறினார். (சி)

## சைவ சித்தாந்தம் பற்றிய

## விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகின் ஆதரவில் இடம்பெற்று வரும் சைவசித்தாந்தம் பற்றிய பொது விரிவுரைத் தொடரின் 4ஆவது அமர்வு இன்று சனிக்கிழமை 23ம் திகதி காலை 9 மணி முதல் 12 மணி வரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக நூலகர் திரு சி முருகவேளின் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள 4வது அமர்விலே மெய்யியற் துறைத்தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா 'சைவசித்தாந்தத்தின் அறிவுக் கொள்கை' என்ற பொருளிலும் மெய்யியற்றுறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சிவானந்தமூர்த்தி 'ஆன்மசிற்சக்தி' என்றபொருளிலும் விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

இவ் விரிவுரைத்தொடர்களுக்கு பதிவுசெய்து பங்குபற்றுபவர்கள் மாத்திரமன்றி மேற்படி கலைப்பில் விரிவுரை கேட்க விரும்பும் பொதுமக்கள் யாவரும் பார்வையாளராகக் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. ரா. சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ரி)

## விதவைகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிபகுதியிலுள்ள நூறு விதவைகளுக்கு ஆடு வளர்ப்பதற்கான கடனுதவிகள் அறவழிப் போராட்டக் குழுவினால் வழங்கப்படவுள்ளது

ஏனைய தொண்டர் நிறுவனங்களிடமிருந்து இதுவரை காலமும் உதவிகள் பெறாத விதவைகளுக்கு இக்கடனுதவி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 11-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 11-வது ஆண்டு நிறைவு விழா இன்று 23-ம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் யாழ். இன்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக திரு. க டிவகலாலா, திரு. கு சிறில், கலாநிதி ரி. டபிள்யூ ஜெயகுலராஜா, திரு து. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

# அரசாங்கத்தை கண்டித்து பத்திரிகையாளர் கூட்டம்

(கொழும்பு)

பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்துவதையும், எழுத்துச் சுதந்திரத்திற்கு கட்டுப்பாடு விதிப்பதையும் கண்டித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

அண்மைக்காலமாக பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துவருவதுடன் இத்தாக்குதலுக்கு அரசபடைகளான பொலிசாரும், இராணுவத்தினருமே காரணம் என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர் பாதுகாப்பு குறித்தும் இக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ரி-இ)

# "பத்திரிகையாளர்களை கைதுசெய்ய முடியாது"

(கொழும்பு

"அரசாங்கம் பத்திரிகையாளர்களை கைது செய்யமுடியாது" என்ற சுலோக அட்டையை நேற்று நாடாளுமன்றத்தில் கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. எஸ். டி. ஜெனாண்டோ புள்ளே தூக்கிக் காட்டினார்.

"அரசாங்கம் பத்திரிகையாளரை நசுக்க முயல்கிறது. பத்திரிகையாளரை ஏமாற்ற அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் குற்றம் சாட்டினார். (ரி-சு)

## மண்ணெண்ணை விநியோகம்

(அரியாலை)

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவு சங்கம் தனது ஸ்ரான்லி வீதியிலுள்ள ம. எண்ணெய்விநியோக நிலையத்தில் ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு லீற்றர் ம. எண்ணை 50/- ரூபா வீதம்விநியோகம்செய்து வருகிறது

இம்மாதம் 26ந் திகதி வரை இவ் விநியோகம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (56)

## 1990/1991-ம் ஆண்டு திரைப்பட விருதுகள்

(சென்னை)

தமிழக அரசின் 1991-1992ம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளை, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னையில் வைத்து வழங்கினார்.

1990ம்ஆண்டில் மிகச் சிறந்த படம்: புது வசந்தம். சிறந்த நடிகர்: கார்த்திக் சிறந்த நடிகை: ரேவதி. சிறப்பு நடிகர்: சத்தியராஜ். சிறப்பு நடிகை: கௌதமி. சிறந்த இயக்குநர்: புதுவசந்தம் இயக்குநர் விக்கிரமன். சிறந்த பின்னணிப் பாடகர்: எஸ். பி. பாலசுப்பிரமணியம். சிறந்த பாடகி: சித்ரா.

1991ம் ஆண்டில் சிறந்த படம்: சின்னத்தம்பி. சிறந்த நடிகர்: பிரபு. சிறந்த நடிகை: குஷ்பூ. சிறப்பு நடிகர்: ராஜ்கிரன். சிறப்பு நடிகை: பானுப்பிரியா. சிறந்த இயக்குநர்: சின்னத்தம்பி இயக்குநர்: வாசு. பின்னணிப் பாடகர்: மனோ. பாடகி: சுவர்ணலதா.

# ஆனையிறவு பாதையை திறக்க புலிகளின் ஒத்துழைப்பை அரசு நாடுகிறது

## அமைச்சர் ரணில் தகவல்

(கொழும்பு)

ஆனையிறவு ஊடாக யாழ். குடாநாட்டிற்கு பொருட்களை கொண்டு செல்வதற்கும் குடாநாட்டிலிருந்து ஏனைய இடங்களுக்கு பொருள்களை எடுத்துச்செல்வதற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பை பெறுவதற்கு அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சமிதியைக்கேட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாதகாலம் நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்திற்கு அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்து பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

ஆனையிறவுப்பகுதிபாதை ஊடாக புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தொடுக்கப் போவதில்லை என்று வழமைக்கு மாறான உறுதிமொழி ஒன்றை அளிப்பதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிளாலி கடலேரிப்பாதை போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. அதனூடாக மக்கள் பயணம் செய்வதானால் ஆபத்தை எதிர்நோக்கும் மனோநிலையுடன்தான் செல்ல வேண்டும். இக்கடலேரியில் மீன்பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-ரி)

## மீனவர்மீது தாக்கு

(நெல்லியடி)

படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை கடலில் வழிமறித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அவர்களைத் தாக்கிவிட்டு படகில் இணைக்கப்பட்டிருந்த இயந்திரத்தையும் கழற்றி எடுத்துச் சென்றுவிளதாக தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் நேற்றுக்காலை வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிக்கடலில் நடந்துள்ளது. 160

## படையினர் பாவனைக்கு 70 புதிய பஸ்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பொலிசாரும், இராணுவத்தினரும் பயன்படுத்துவதற்கென எழுபது பஸ்கள் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டது.

ஒவ்வொன்றும் 61 ஆசனங்களைக்கொண்ட மேற்படி பஸ்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார். (இ-நி)

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்

26
06
1960



மறைவு

23
01
1986

### செல்வி ஆரூர் செந்தில்குமாரி

பூத்த மலர் நீ
மணப்பதற்குள் உதிர்ந்துவிட்டாய்
ஏழாண்டு சென்றாலும்
உன் வாசம் மாறவில்லை.
எம்மிதயம் நிறைந்த சீர்நிறை செல்வியே!
உன்பிரிவால் வாடுகிறோம்.
உனை எங்கும் தேடுகிறோம்
சாந்தி நீ பெற்றிடுவாய்
சாந்தி நீ தந்திடுவாய்.

சகோதரிகள், மைத்துனர்,
பெருமக்கள், உற்றார், உறவினர்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம். (எ-2815)

## மரண அறிவித்தல்

### PASTOR BONNY

இலங்கை பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த பாஸ்ட்டர் போனிவெஞ்சர் குருஸ் 21-ந் திகதி வியாழனன்று மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னாரது அடக்க ஆராதனை 25-ந் திகதி திங்கட்கிழமை அன்று பிற்பகல் 3 மணிக்கு 11 ரெட்றிக்கோ பிளேஸ் மட்டக்குளியாவில் உள்ள இலங்கை பெந்தகொஸ்தே சபை சாலையில் நடைபெறும்.

அச்சமயம் 111, கண்டி வீதி சுண்டிக்குளியில் உள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபையிலும் ஆராதனையொன்று நடைபெறும். விசுவாசிகளும் அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோ D. ஸ்ரான்லி,
111, கண்டி வீதி,
சுண்டிக்குளி. (சி-7164)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இவன்லோக் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B

## வீதி விபத்தில் இளம்பெண் பலி

(கொழும்புத்துறை)

ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகாமையில் நேற்றுக்காலை தனது தந்தையுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 13 வயதுப்பெண் ஒருவர் வீதியால் வந்துகொண்டிருந்த லொறியால் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

தமிழீழக் காவல்துறையினர் சம்பந்தப்பட்ட லொறிச் சாரதியை உடன்கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (154 இ)

**மன்னாரில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் பேசாலை பொலிஸ் நிலையத்திலிருந்து புதுக்குடியிருப்பு காவல் நிலையத்திற்கு சென்றுகொண்டிருந்த பொலிசார் மீது துந்துவில் என்ற இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் இத்தாக்குதலை நடத்தின. (ம-இ)

**சமரசத்தீர்வு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் மட்டு-சமாதானக் குழுவைச் சந்தித்த பின்னரே மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

இனப்பிரச்னைக்கு உறுதியானதும் இறுதியானதுமான தீர்வு ஏற்பட எம்மாலியன்ற ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம் என்றும் இக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி)

**கிட்டு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக உழைத்தார்.

ஐரோப்பிய நாடுகளின் சமாதான முயற்சித் திட்டங்களுடனேயே திரு கிட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருக்கக்கூடும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவேக்கர் அமைப்பின் மேற்படி அறிக்கையினால் கேணல் கிட்டு சமாதானத் திட்டத்துடனேயே கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு சென்றார் என்பது தற்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வி)

## இந்திய கடல் எல்லைக்குள் இட்டுவின் கப்பல் சென்றிருக்க முடியாது

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளின் சமாதானத் திட்டத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்த விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவின் கப்பலை இந்திய கடற்படையினர், சர்வதேச கடல் பிராந்தியத்தில் வைத்தே கைது செய்திருக்கக் கூடுமென்று சர்வதேச அரங்கில் கருதப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

கிட்டுவின் கப்பல் சென்னையிலிருந்து 12 மைல் தொலைவில் வைத்தே இந்தியக்கடற்படையினர் தடுத்து நிறுத்தினார் என்று இந்தியா கூறுகின்றது. ஆனால் இந்தியாவின் கடல் எல்லையை அண்டி தளபதி கிட்டு தனது கப்பலை ஒருபோதும் செலுத்தியிருக்க மாட்டார்.

தளபதி கிட்டுவின் கப்பலை இந்தியக் கடற்படையினர் தடுத்து நிறுத்தி அதன்பின்பு 36மணித்தியாலங்கள் பயணம் செய்தபின்பே சென்னை கடல் பரப்புக்குள் கொண்டுவந்தனர் என்று முன்னர் இந்திய அதிகாரிகள் கூறினர்.

ஆகவே இதன் அடிப்படையில் பார்க்கும்போது தளபதி கிட்டுவின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்தே இந்தியக்கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்து தற்போது ஏற்பட்டிருப்பதாக பி பி.ஸி. மேலும் தெரிவித்தது. (வி)

## புகைப்படக்கலை பயிற்சி இன்று ஆரம்பம்

(நல்லூர்)

யாழ். பல்கலைக் கழகத்தின் அறநிலைப்படிப்புகள் அலகினால் இன்று சனிக்கிழமை புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்றிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வு இன்று மாலை 2 மணிக்கு பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகும்.

மேற்படி பயிற்சிகளுக்கு 700ற்கும்மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதால் முதற் பயிற்சிக்கென வயது அடிப்படையில் 100பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (158)

**தமிழ் அகதிகள**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக்கான போக்குவரத்துக்குறித்தும் அகதிகளுக்கு புனர்வாழவு அளிப்பது குறித்தும் வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகள் நிலைகுறித்தும் இங்கு பேசப்பட்டதாக அறியவருகிறது. (இ-157)

**பலாலி**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாத கூடுதலானோர் இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை இங்கு தடுத்து வைத்திருப்பதில் எதுவித பயனும் இல்லை.

ஆகவே இவர்களை உடன் விடுதலை செய்வதற்கு அனுமதி வழங்கும்படி, தான் இராணுவத் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாக பிரிகேடியர் குலதுங்கா தம்மிடம் பலாலியில் வைத்துக் கூறியுள்ளதாக யாழ். அரச அதிபர் கூறினார். (வி)

**பூநகரி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகர் காரியாலயம் ஏற்றுள்ளது.

கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெரிஞ்ஞன்டோ அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் மற்றும் மன்னார் ஆயர் ராயப்பு யோசப்பும் மேறபடி பாதையை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடும்படி ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதும், யாழ். மாவட்டத்திலிருந்து பல பொது நிறுவனங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரின் நிமித்தம் பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேநேரம் இப்பாதை பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடுவது பற்றியோ, அல்லது பூநகரிப் பகுதியில் உள்ள இராணுவத்தை வாபஸ் பெற்றுக்கொள்வது பற்றியோ தமக்கு இதுவரை எந்தவித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என்று இராணுவத் தலைமைச் செயலக அதிகாரிகள் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## நிதியாளர் யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நிதியாளர் எஸ். காந்தமூர்த்தி கொழும்பிலிருந்து விடுவிக்கப்பட்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 3-ந் திகதி கைது செய்யப்பட்ட இவர் பொரளை பொலிஸ் நிலையத்தில் 42 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபின் பொங்கலன்று கொழும்பு ஹல்ஸ்டொப் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே (இ-158)

## அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

விரைவில் நடைபெறவிருக்கும் எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் அடையாள அட்டைகள் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி அடையாள அட்டைகளை அடுத்த வாரம் முதல் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ளலாமென்றும் கூறப்படுகின்றது. (வி)

**அப்பியாசக்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சக் கொப்பிகள் மேற்படி கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாகவும், இந்தஅப்பியாசக்கொப்பிகள் ஓரிருவந்து சேர்ந்ததும் தற்போது யாழ். மாவட்டத்தில் நிலவிவரும் அப்பியாசக் கொப்பிகளின் தட்டுப்பாடு நீங்கிவிடும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார் (வி)

**நெடுமாறன்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரபாண்டியன் ஆகியோரை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்கும்படி சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

இந்த நால்வரும் விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு பலியானதற்கு இந்தியாவைக் கண்டிக்கும்முகமாக திட்டங்களை தீட்டிக்கொண்டிருந்த போது பொலிசாரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. (க)

## இந்தியாவில் பிரிட்டிஷ் பிரதமர்

(புதுடில்லி)

பிரிட்டிஷ் பிரதமர் ஜோண் மேஜர் இன்று இந்தியா வருகிறார்.

இவர் இந்தியாவில் ஆறு நாட்கள் தங்கியிருப்பார். (வி)